பக்கங்கள் 15

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 04 வெள்ளிக்கிழமை 16.02.2024 அதிர்வு 200

## சு.கவில் இருந்து 9 பேர் சஜித் பக்கம் தாவ முடிவு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர்கள் 9 பேர் விரைவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் இணையவுள்ளனர் என்று எதிர்க்கட்சியின் 04

# தடைகளை முறியடித்து சரித்திரம் படைப்போம்!

### நீதிமன்ற இடைக்காலத் தடையின் பின் சிறீதரன் சூளுரை

"இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக எந்தச் சூழ்ச்சிகள், தடைகள் வந்தாலும் மக்களின் ஆத்ம பலத்துடன் அதனை முறியடித்து சரித்திரம் படைப்போம்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சர்ச்சைக்குரிய கூட்டத்தில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகவும், கட்சியின் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்த பொதுக் குழுக் கூட்டங்களின் முடிவுகளுக்கு எதிராகவும் யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து நேற்று இடைக்காலத் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த இடைக்காலத் தடை உத்தரவுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 04



# 10 வயது சிறுமியைச் சீரழித்து படுகொலை செய்த காமுகன்!

(மன்னார் நிருபர்)

பத்து வயதான சிறுமி ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் மன்னார், தலைமன்னார் கிராமத்தில் நேற்று இரவு நடைபெற்றுள்ளது.

தலைமன்னார் கிராமம் பகுதியில் தோட்டம் ஒன்றைப் பராமறிப்பதற்காகப் பணியமர்த்தப்பட்ட நபர் ஒருவராலேயே மேற்படி சிறுமி கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. 04








# மலையக மக்களுக்காகவும் எனது குரல் ஓங்கி ஒலிக்கும்

## ஜீவனிடம் சிறீதரன் உறுதி

**(எஸ்.நிதர்ஷன்)**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சர்ச்சைக்குரிய கூட்டத்தில் தலைவராகத் தெரிவாகியிருக்கும் சிவஞானம் சிறீதரனை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மரியாதை நிமித்தம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறீதரனின் இல்லத்தில் இந்தக் கலந்துரையாடல் இன்று காலை இடம்பெற்றது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவாகியிருக்கும் சிவஞானம் சிறீதரனுக்கு ஜீவன் தொண்டமான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

நீர் வழங்கல் தொடர்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ள விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அதேவேளை, மலையகத் தமிழர்களின் அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்காகத் தான் தொடர்ந்து குரல் கொடுக்கின்றார் என்றும், தமது கட்சியின் ஆதரவு தொடர்ந்து இருக்கும் என்றும் சிறீதரன் எம்.பி. உறுதியளித்துள்ளார்.



# மயிலத்தமடுவில் மேய்ச்சல் தரை அழிப்பு!

## கால்நடைப் பண்ணையாளர்கள் கவலை

**(எஸ். சதீஸ்குமார் )**

மட்டக்களப்பு – மாதவனை, மயிலத்தமடு பகுதியில் பெரும்பான்மை இனத்தவர்கள், எமது கால்நடைகளின் மேய்ச்சல் தரையைப் பரக்குவாட் போன்ற களைநாசினிகளை விசிறி, தீ வைத்து வருகின்றனர் என்று கால்நடைப் பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பண்ணையாளர்கள் மேலும் கூறுகையில்,

“சிங்கள காணி ஆக்கிரமிப்பாளர்கள், தாம் அபகரித்த காணிகளில் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருவதுடன் அருகிலுள்ள வேறு மேய்ச்சல் தரை காணிகளையும் அபகரிக்கும் நோக்குடன் புற்தரைகளையும், காடுகளையும் தீயிட்டு அழித்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் கடந்த 14ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வருகின்றது. இதனை வனலாகா, வன ஜீவராசிகள் திணைக்களம் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

பரக்குவாட் களைநாசினி விசிறிய புல் தரையில் எமது கால்நடைகள் மேய்வதால் சில மாடுகள் நோய் வாய்ப்பட்டுள்ளன.

எமது வாழ்வாதாரம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. இந்த அநீதிகளைக் கேட்பதற்கும் எவருமில்லை, பார்ப்பதற்கும் எவருமில்லை.” – என்றனர்.



# அமைச்சர் ஜீவனின் பங்கேற்புடன் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கூட்டம் ஆரம்பமானது.

இந்தக் கூட்டத்தில் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், யாழ். மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேசசெயலாளர்கள், பொலிஸார், முப்படையினர் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



# விஷம் கலந்த பால் கொடுத்த சம்பவம்: பிரதான சந்தேகநபரும் நேற்று கைது!


கொழும்பு, ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு சந்தேகநபர்களுக்கு விஷம் கலந்த பால் கொடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேகநபர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.



வத்தளைப் பகுதியைச் சேர்ந்த மேற்படி சந்தேகநபருடன் இருந்த கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

25, 35 வயதுகளுடைய சந்தேக நபர்களிடம் இருந்து ஐஸ் போதைப் பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## 2016ஆம் ஆண்டு தெரிவித்த இனவாதக் கருத்துக்காக

# முஸ்லிம் சமூகத்திடம் பகிரங்க மன்னிப்புக் கோரிய ஞானசாரர்

இலங்கையில் வாழும் முஸ்லிம் சமூகத்திடம் பொதுபலசேன அமைப்பின் பொதுச்செயலாளரான ஞானசார தேரர் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியுள்ளார்.

2016ஆம் ஆண்டு முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக வெளியிட்ட கருத்துக்காக மன்னிப்புக் கோருவதாக அவர் அறிவித்துள்ளார்.

ஞானசார தேரர் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கடுமையான இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வந்தார். இதனால் பல சர்ச்சைகள் எழுந்திருந்திருந்தன.

இந்நிலையில், 2016ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் திகதி ஆலயம் ஒன்றில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக வெளியிட்ட கருத்து அந்தச் சமூகத்துக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி இருக்கும் என்றும், 8 வருடங்களின் பின்னர் அது பற்றி தான் உணர்ந்துகொள்கின்றார் என்றும் ஞானசார தேரர் கூறியுள்ளார்.

அந்தக் கருத்துக்கு எதிரான வழக்கின் இறுதித் தீர்ப்பில் ஞானசார தேரருக்கு நீதிமன்றால் கடும் தண்டனை வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், முஸ்லிம் சமூகத்திடம் அவர் பகிரங்க மன்னிப்புக் கோரியுள்ளதுடன் கவலையையும் வெளியிட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளிலும் மற்றும் முஸ்லிம் பிரதேசங்களிலும் தீவிரமான பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளுக்கு ஞானசார தேரர் மூலகாரணமாக இருந்தார்.

அத்துடன் அச்சுறுத்தல், கொலை மிரட்டல் போன்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டமைக்காகப் பொலிஸாரால் அவர் பல தடவைகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தடைகளை முறியடித்து...**

“எந்த வழக்கையும் எதிர்கொள்ள நாம் தயார். எமக்கு எதிரான சூழ்ச்சிகள், தடைகளை நாம் மக்களின் ஆத்ம பலத்துடன் முறியடிப்போம்.

என்னையும் எனது கட்சியையும் குழப்பும், அச்சுறுத்தும் வகையில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவற்றைக் கண்டு நாம் அஞ்சப் போவதில்லை.

என்னைத் தமது தலைவராக ஏற்றுக்கொண்ட கட்சியையும் எமது மக்களையும் இப்படியான சூழ்ச்சிகளால் முடக்க முடியாது. எத்தனை வழக்குகள் வந்தாலும் அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். நீதி நிச்சயம் வெல்லும்.” – என்றார்.

**சு.கவில் இருந்து...**

தகவல் அறியும் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றம், மாகாண சபை மற்றும் மாநகர சபையைப் பிரதிநிதித்துவப் படுத்தியவர்களே இவ்வாறு இணையவுள்ளனர்.

இந்தக் குழுவினர் ஒரே தடவையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணையமாட்டார்கள் என்றும், கட்டம் கட்டமாக இணையவுள்ளனர் என்றும் சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, சு.கவின் தலைவர் மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவுக்குப் பயணமொன்றை மேற்கொண்டுள்ள நிலையிலேயே இந்தக் குழுவினர் சஜித் தரப்புடன் இணையத் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பில் அறிந்துள்ள மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்டவர்களிடம் அதிருப்தியை வெளியிட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

**10 வயது...**

அந்த நபர் மற்றும் அவரது மனைவி தலைமன்னார் பகுதியில் வசித்து வந்த நிலையில் கணவன் போதைக்கு அடிமையான நிலையில் மனைவி பிரிந்து சென்றுள்ளார்.

இந்தநிலையில் அருகில் இருக்கும் பெண் ஒருவர் சந்தேகநபருக்கு உணவு வழங்கி வந்த நிலையில், அவர்களுடன் சந்தேகநபர் நட்பாகப் பழகி வந்துள்ளார்.

சந்தேகநபர் நேற்று மாலை உணவு வழங்கும் பெண்ணின் பேத்தியான மேற்படி சிறுமியைக் கடைக்கு அழைத்துச் சென்ற நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அருகில் இருந்த சி.சி.ரி.வி. கமராக்களின் உதவியுடனும், ஊர் மக்களின் உதவியுடனும் மேற்கோண்ட தேடுதலின்போது சிறுமியின் சடலம் இன்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தலைமன்னார் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சமூக பிணக்குத் தீர்வுகளை வலுப்படுத்தல் செயலமர்வு

**(ஹஸ்பர்)**

இலங்கையில் சமூகப் பிரச்சினைகளில் ஏற்படும் பிணக்குகளை தீர்ப்பதற்கான தீர்வுகளை வலுப்படுத்தல் தொடர்பான இரு நாள்கள் கொண்ட பயிற்சிப் பட்டறை ஒன்று கிண்ணியா விசன் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதனை பயனுறுதிமிக்க வகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் எனும் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் பங்களிப்புடன் நிதிப் பங்களிப்பை பிரிட்டிஷ் கவுன்சில் வழங்கியிருந்தது.

மூதூர், தம்பலகாமம் பிரதேச செயலகங்களில் தெரிவு செய்யப்பட்ட துறை சார் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என சுமார் 30 பேர் இதில் கலந்து கொண்டனர்.

இதில் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள், முரண்பாட்டு வகைகள் மற்றும் அதனை எவ்வாறு பகுப்பாய்வு செய்வது, தீர்வை வழங்குதல் உட்பட பல குழு கலந்துரையாடல்களுடன் திறம்பட பயிற்சியளிக்கப் பட்டது.

சமூக மட்டத்தில் மாத்திரமல்ல தனி நபர், குழுக்கள் என பலதரப்பட்ட வகையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இவ்வாறான நிலையில் தங்களது சமூக மட்ட அமைப்புக்கள் அரச துறை அலுவலகங்களில் ஏற்படும் பிணக்குகளுக்கு தீர்வுகாணச் சிறந்ததொரு பயிற்சியாக இந்த இரு நாள்கள் கொண்ட பயிற்சி பெரும் பங்களிப்புச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வன்முறைகள் மூலம் ஏற்படும் விளைவுகளை குறைக்க தீர்வுகளை பெறவும் அதற்கான திறன்கள் நுட்பங்களை கையாண்டு சமூக மட்ட அமைப்புக்களை வலுப்படுத்தவும் இந்தப் பிணக்குத் தொடர்பான பயிற்சிப் பட்டறை மேலும் சிறப்பாக அமையலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பயிற்சிப் பட்டறைக்கு வளவாளராக எம்.ஜெ.எம்.இர்பான் கலந்து கொண்டு பல வழிகாட்டல்களுடன் திறம்பட விரிவுரைகளைக் குழுச் செயற்பாடு மூலமாக வழங்கியிருந்தார்.

இதில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மைய திருகோணமலை மாவட்ட கள இணைப்பாளர்கள், தம்பலகாமம் மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அடக்குமுறை தொடரும்

மக்களிடம் உண்மைகள் சென்றடைவதைத் தடுத்து, மக்களைத் தவறான வழியில் திசை திருப்பி, பிழையைச் சரி என நம்ப வைத்தால் மட்டுமே தேர்தல்களில் வெல்ல முடியும் என்ற உண்மை அரசுக்கு - ஆளும் தரப்புக்கு - பட்டவர்த்தனமாகத் தெரிகின்றது. புரிகின்றது.

அதனால்தான் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரத்தை முடக்கும் தந்திரோபாய மார்க்கங்களை அது நாடுகின்றது என்பது வெளிப்படையானது.

நவீன தொழில்நுட்ப உலகில் மக்களை கருத்துக்கள் விரைந்து சென்றடையும் மார்க்கமாக சமூக ஊடகங்கள் அமைந்துள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்தி அடக்காவிட்டால் இலகுவாக - விரைந்து - மக்கள் உண்மைகளைக் கண்டறிந்து விடுவர், தங்கள் நடிப்பு அரசியல் அம்பலமாகிவிடும் என்பதைப் புரிந்து கொண்ட ஆட்சித் தரப்பு அதனால்தான் நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை அவசர அவசரமாக கொண்டு வந்து நிறைவேற்றியது.

அரசமைப்பின் மூலம் நாட்டின் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் ஒரு சட்டம் கொண்டுவரப்படுமானால் அது அரசமைப்பு மாற்றம் அல்லது திருத்தம் என்றே கருதப்படத்தக்கது. அதனால் அத்தகைய சட்டங்களின் பிரிவுகளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு வேண்டும் என்றோ அல்லது அத்தகைய ஆதரவுடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதியையும் பெற வேண்டும் என்றோ உயர்நீதிமன்றம் பணிக்கும். இது வழமையான சட்டமுறைமைதான்.

அரசு கொண்டுவந்த நிகழ்நிலைக் காப்புச் சட்டத்திலும் மக்களின் கருத்து வெளிப்படும் சுதந்திர உட்பட அடிப்படை உரிமைகளை மீறும் பல விடயங்கள் இருந்தமையால் அவற்றை நிறைவேற்றுவதாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு அவசியம் அல்லது அந்தச் சட்டமூலத்தில் சம்பந்தப்பட்ட பிரிவுகளை மாற்றிவிட்டு, சாதாரணப் பெரும்பான்மை மூலம் அதனை நிறைவேற்ற முடியும் என்று உயர்நீதிமன்றம் தெளிவாகவும் விளக்கமாகவும் பரிந்துரை செய்திருந்தது.

ஆனால் அதையெல்லாம் மீறி, உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டிய பல பிரிவுகளைத் திருத்தாமலேயே, நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் சட்டமூலத்தை நிறைவேற்றி, அது சட்டமாகிவிட்டது என்று அறிவித்திருக்கின்றது ரணிலின் அரசு.

உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டலையும் மீறி சமூக ஊடகங்களை அடக்கும் சட்ட விரோத நடவடிக்கையை சட்டத்தின் பெயரினால் நிறைவேற்றியிருக்கும் ரணிலின் அரசு, ஒளிபரப்பு சனல்களை கட்டுப்படுத்துவதற்கு ஒளிபரப்பு ஆணைய சட்டத்தை கொண்டுவர முடிவு செய்திருப்பதாக இப்போது செய்திகள் வெளியாகி உள்ளன.

இணையத்தளங்கள் உட்பட சமூக ஊடகங்களை நீதி முறையற்ற விதத்தில் தான் நிறைவேற்றிய நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் மூலம் அடக்கிக் கட்டுப்படுத்தத் தயாராகும் அரசு, ஒளிபரப்பு மற்றும் மின்னணு ஊடகச் சனல்களை கட்டுப்படுத்த வேறு புதிய சட்ட ஏற்பாட்டை கொண்டு வருகின்றது என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷா டி சில்வா தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

இதன்மூலம்வானொலி மற்றும்தொலைக்காட்சிச் சேவைகளையும் அடக்கித் தன் கட்டுப்பாட்டில் அவற்றை வைத்திருப்பதுதான் அரசின் எண்ணம்.

இதற்காக ஒளிபரப்பு, ஒலிபரப்பு ஆணைய சட்டத்தை கொண்டு வர அரசு முயற்சித்து வருகிறது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

புதிய உத்தேச ஏற்பாட்டின்படி -

உரிமம் பெற்ற ஊடக சனல்களின் உரிமத்தை வருடத்திற்கு ஒருமுறை புதுப்பிக்க ஒளிபரப்பு, ஒலிபரப்பு அதிகாரசபை சட்டம் சம்பந்தப்பட்ட ஆணையத்திற்கு அங்கீகாரம் அளிக்கிறது.

ஒலிபரப்பு ஆணையச் சட்டம், ஊடக சனல்களுக்கு வழங்கப்படும் உரிமம் குறித்து முடிவு செய்ய ஒரு குழுவுக்கு அதிகாரம் அளிக்கிறது. ஊடக சனல்களுக்கு உரிமம் வழங்கலாமா, வேண்டாமா என்பதை அவர்கள் முடிவு செய்யலாம். ஊடக சனல்களில் தகவல் வெளியிடுகை குறித்து ஆணையத்திற்கு அதிருப்தி இருக்குமானால் அந்த சனலுக்கு வருடாந்திர உரிமத்தை வழங்காமல் ஆணையம் அதனைத் தடுக்கலாம்.

அதாவது வருடாந்திர உரிமம் என்ற விவகாரத்தைத் துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தி, ஊடகச் சனல்களைக் கட்டுப்படுத்தி அல்லது முடக்கிக் காரியமாற்றும் எத்தனம்தான் இது.

தேர்தல் நெருங்க நெருங்க தோல்விப் பயத்தில் குழம்பிப் போகும் அரசுத் தலைமை மக்களின் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரத்தை கட்டுப்படுத்த இது போன்ற பல ஒழுங்கு விதிகள், சட்டங்கள், கட்டுப்பாடுகளை மேலும் மேலும் நாடும். இது தவிர்க்க முடியாத - எதிர்கொள்ள வேண்டிய - ஒரு கட்டாயமாகவே இருக்கும்.



# அம்பாறை பாடசாலைகளில் ஆங்கில மொழி தென் கிழக்குப் பல்கலைக்கழகம் நடவடிக்கை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆரம்ப மற்றும் இடை நிலைப் பாடசாலைகளில் ஆங்கில மொழி கற்பித்தல் மற்றும் கற்றலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு ஆக்கபூர்வமான கலந்துரையாடல் அண்மையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

அவுஸ்திரேலியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நுண்விருத்திப் பங்குதாரர் (Partner In Micro Development) கலாநிதி டோனா வாகன், தென் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், கலை மற்றும் கலாச்சார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், ஆங்கில மொழி கற்பித்தல் பீட தலைவர் கலாநிதி பௌசுல் கரீமா ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

நுண்விருத்திப் பங்குதாரரின் (Partner In Micro Development) ஆங்கில எழுத்தறிவுத் திட்டம் மற்றும் ஆசிரியர் பயிற்சி பாடத்திட்டத்தில் இரு நிறுவனங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு வாய்ப்புகளை ஆராய்வது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அம்பாறை மாவட்டப் பாடசாலைகள் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்குப் பயனளிக்கும் இந்தத் திட்டத்தின் திறனை உணர்ந்து, இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

இந்த முயற்சியானது அம்பாறை சமூகத்துடன் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துடனான தொடர்பை வலுப்படுத்துவதிலும் அதன் கல்விச் சலுகைகளின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதிலும் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கொண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆங்கில எழுத்தறிவுத் திட்டமானது பாடசாலைகளுக்கு மிகவும் பெறுமதியான ஆசிரியர் பயிற்சி மற்றும் வளங்களை வழங்கும், அத்துடன் அம்பாறை பிரதேசத்தில் உள்ள மாணவர்களுக்கான ஆங்கில மொழிக் கல்வி மேம்பட்ட தரத்துக்கு உயர்த்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அட்டாளைச்சேனை அல் மினா வருடாந்த பரிசளிப்பு விழா

(எம்.எப்.றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை சம்பு நகர் அல் மினா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் மாணவர் மன்றமும் நடைபெற்றுள்ளன.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். றியாஸ் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிழ்வில் கல்வி அதிகாரிகள், கல்வியலாளர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

2023 - 2024 கல்வி ஆண்டில் திறமை காட்டிய மாணவர்களுக்கு அதிதிகளால் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் என்பன வழங்கி வைக்கப்பட்டதோடு மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.






# பட்டிருப்பு கல்வி மாணவருக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலக முறைசாராக் கல்விப்பிரின் ஒழுங்கு படுத்தலில் களுதாவளை சமுக பொருளாதார அபிவித்திச் சங்கம் கட்டாரில் தொழில் புரியும் உறவுகளின் பிரதான அனுசரணையில் வருடாவருடம் பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணவர்களை அந்த நிலையிலிருந்து மீட்டு இடைவிலகலைத் தவிர்த்து தொடர் கல்வியை பெறுவதற்காக கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.




இந்த நிகழ்வின் முதல் கட்டம் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் களுவாஞ்சிகுடியில் முறைசாராக் கல்வி இணைப்பாளர் திருமதி ரீற்றா கலைச் செல்வனின் ஏற்பாட்டில் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.ஜீவானந்தராசா, சீடா அமைப்பின் தலைவர் க.கிசோபன், சீடா அமைப்பின் உறுப்பினர்கள், பட்டிருப்பு கல்வி வலயத்தின் மண்முனை தென் எருவில்பற்று கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள், முறைசாராக் கல்வி உத்தியோகத்தர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# சாரணர் ஆசிரியருக்கு சான்றிதழ் வழங்கல்





(எம்.எப்.றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரணர் துறையில் கலைக்கூறு ஒன்று முடித்த ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மாகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட சாரணர் சங்கத்தின் தவிசாளர் யூ.எல்.எம்.ஹாசீம் உட்பட உதவி மாவட்ட ஆணையாளர்கள், சங்கத்தின் உறுப்பினர்கள், சாரண ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டர்.




# மத்திய அமைச்சர்கள் நடத்திய 3 ஆம் கட்ட பேச்சு தோல்வி

## போராட்டம் தொடருமென விவசாயிகள் அறிவிப்பு

பல்வேறு விவசாய அமைப்புகள் வேளாண் பொருள்களுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலை, கொள்முதலுக்கான உத்தரவாதம், விவசாய கடன் தள்ளுபடி, ஓய்வூதியம் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து டில்லி நோக்கி செல்லும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சூழலில், சண்டிகரில் மத்திய அமைச்சர்கள் மற்றும் விவசாயிகளுக்கு இடையிலான 3 ஆம் கட்ட பேச்சு வார்த்தை நேற்று நடைபெற்றது. இன்று அதிகாலை வரை நீடித்த இந்த பேச்சு வார்த்தையில் தீர்வு எட்டப்படவில்லை.

இந்த நிலையில், தங்களது போராட்டம் தொடரும் என விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். இன்று நாடு தழுவிய அளவில் 'பாரத் பந்த்' போராட்டமும் நடத்த திட்டமிடப் பட்டது. 3 ஆம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின்னர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அடுத்த கட்ட பேச்சுவார்த்தை நடைபெறும் என மத்திய அமைச்சர் அர்ஜுன் முண்டா தெரிவித்துள்ளார்.

விவசாய சங்கத்தினர் மத்திய அரசுடன் கடந்த 8 மற்றும் 12 ஆம் திகதிகளில் தங்கள் கோரிக்கைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் எந்த தீர்வும் காணப்படவில்லை. இந்த நிலையில், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும், மத்திய அமைச்சர்கள் அடங்கிய குழுவினரும் நேற்று மாலை 3 ஆம் கட்ட பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்த பேச்சுவார்த்தையில் மத்திய அரசின் சார்பில் வேளாண் அமைச்சர் அர்ஜுன் முண்டா, வணிகத்துறை அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் உள்துறை இணையமைச்சர் நித்யானந்த ராய் ஆகியோர் பங்கேற்றனர். இன்று அதிகாலை வரை நீடித்த இந்த பேச்சுவார்த்தையில் தீர்வு எட்டப்பட வில்லை. இந்த சூழலில் போராட்டத்தை தொடர விவசாயிகள் முடிவு செய்துள் ளனர்.

இந்த நிலையில், விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டோம். அவர்களது கோரிக்கைகள் தொடர்பாக சுமூக தீர்வு காணப்படும் அடுத்த கட்ட பேச்சுவார்த்தை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என அர்ஜுன் முண்டா தெரிவித்தார்.

"பேச்சுவார்த்தை நடந்து வரும் சூழலில் அமைதியான வழியில் எங்கள் எது போராட்டத்தை தொடர முடிவு செய்துள்ளோம். அதை தவிர வேறேதும் எங்களால் செய்ய முடியாது. ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் பேச்சுவார்த்தையில் எங்களுக்கு சாதகமான வகையில் தீர்வு கிடைக்கும் என நம்புகிறோம்" என விவசாய அமைப்பின் தலைவர் ஜக்ஜித் சிங் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அறவழியில் போராடும் சொந்த நாட்டு மக்களை பாகிஸ்தானியர்கள் போல அரசு கையாள்வதாக தங்களது ஆதங்கத்தை விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

# பம்பரம் சின்னம் வேண்டும்: ம.தி.மு.க. கோரிக்கை

கடந்த மக்களவை, சட்டப்பேரவைத் தேர்தல்களில் தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்ட ம.தி.மு.க. வேட்பாளர்கள், உதயசூரியன் சின்னத்தில் களம் கண்டனர்.

இந்த நிலையில், எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் தனிச் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்பதில் ம.தி.மு.க. உறுதியாக இருக்கிறது.

முன்னதாக மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு பம்பரம் சின்னத்தை ஒதுக்கீடு செய்யக் கோரி, ம.தி.மு.க. சார்பில் தேர்தல் ஆணையத்திடம் மனு அளிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூவை ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ சந்தித்தார்.



இதன்போது, தேர்தல் ஆணையத்திடம் வழங்கப்பட்ட மனுவின் நகலை வழங்கி, ம.தி.மு.க. வேட்பாளர்களுக்கு பம்பரம் சின்னத்தை ஒதுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

# திருச்சி மத்திய சிறப்பு முகாமிலிருந்து முருகனையும் விடுவிக்க நடவடிக்கை



இலங்கை துணை தூதரகம் ஆவணங்களை வழங்கினால் மட்டுமே முருகனை இலங்கைக்கு திருப்பி அனுப்ப முடியும் என மத்திய அரசு தெரிவித்தது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று கைதிகளாக இருந்த பேரறிவாளன், முருகன், சாந்தன், ரொபர்ட்பயஸ், ஜெயக்குமார் உள்பட 7 பேரை விடுதலை செய்து கடந்த ஆண்டு நவம்பர் மாதம் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இவர்களில் இலங்கையை சேர்ந்த சாந்தன், முருகன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 4 பேரும் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர்.

இவர்கள் தங்களை முகாமில் இருந்து விடுதலை செய்யக்கோரி தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இதில் சாந்தன் தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்க கோரி கோர்ட்டில் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனு விசாரணைக்கு வந்தபோது, சாந்தனை இலங்கைக்கு அனுப்ப விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய-மாநில அரசுகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே முருகனும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், லண்டனில் வசிக்கும் தனது மகளுடன் சேர்ந்து வாழ விரும்புகின்றேன் என்றும் அதற்காக பாஸ்போர்ட் பெற திருச்சி சிறப்பு முகாமில் இருந்து சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகம் அழைத்து செல்ல உத்தரவிடக்கோரி இருந்தார்.

அப்போது மத்திய அரசு தரப்பில், முருகனை லண்டனுக்கு அனுப்ப முடியாது எனவும் இலங்கை துணை தூதரகம் ஆவணங்களை வழங்கினால் மட்டுமே இலங்கைக்கு திருப்பி அனுப்ப முடியும் என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து பயண ஆவணம் வழங்குவதற்கான நேர்காணலுக்கு முருகனை இலங்கை துணை தூதரகம் அழைக்கும்போது அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்க நீதிபதி உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையில் இன்னும் ஓரிரு தினங்களில் முருகன் திருச்சி சிறப்பு முகாமில் இருந்து பலத்த பாதுகாப்புடன் இலங்கை துணை தூதரகம் அழைத்து செல்லப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோல் முகாமில் உள்ள ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 2 பேரையும் விடுவிப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருவதாக சிறப்பு முகாம் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.




# டில்லி தொழிற்சாலையில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி 11 பேர் உயிரிழப்பு

டில்லி அலிபுர் தயால்பூர் மார்க்கெட்டில் உள்ள பெயிண்ட் தொழிற்சாலையில் நேற்று மாலை ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர்.

டில்லி அலிபுர் தயால்பூர் சந்தையில் உள்ள பெயிண்ட் தொழிற்சாலையில் நேற்று மாலை திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. பெயிண்ட் தொழிற்சாலையில் ரசாயனப் பொருள்கள் இருந்ததால் அவை வெடித்து சிதறின. இதனால் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ, அருகில் உள்ள கடைகளுக்கும் வேகமாக பரவியது. தீ விபத்து குறித்து அயலவர்கள் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். 10 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் மூலம் வீரர்கள் பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

இந்த தீ விபத்தில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். மீட்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் உள்பட நான்கு பேர் காயம் அடைந்துள்ளனர் என கூறப்படுகிறது.

மேலும், தொழிற்சாலைக்குள் இருவர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ, அருகில் உள்ள கடைகள் மற்றும் வீடுகளுக்கும் பரவியது. இரசாயன பொருள்கள் வெடித்ததில் கட்டடம் இடிந்து விழுந்தது என தெரிவிக்கப்படுகிறது.



# பொருளாதார வீழ்ச்சி காரணமாக 4 ஆவது நிலையை எட்டிய ஜப்பான்

ஜப்பானின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடு என்ற நிலையிலிருந்து பின் தங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜப்பானிய அமைச்சரவை நேற்று வெளியிட்ட அலுவலகத் தரவுகளின் அடிப்படையிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, 2023 இன் கடைசி காலாண்டில் இருந்தே பொருளாதாரம் மந்த நிலையை எட்டியுள்ளது.

ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான வருடாந்த விகிதத்தில் 0.4 வீதம் பொருளாதாரம் குறைவடைந்ததென அரசாங்கம் அறிவித்தது, இருப்பினும் 2023 ஆம் ஆண்டு முழுவதிலும் 1.9 வீதம் வளர்ச்சியடைந்துள்ளது.

இந்த நிலையில், ஜூலை தொடக்கம் செப்டெம்பருக்குள் 2.9 வீதம் குறை வடைந்து பொருளாதாரம் தொழில்நுட்ப மந்த நிலையில் இருக்கின்றது.

அதேநேரம் ஜப்பானின் குறித்த பொருளாதார பின்தங்கிய நிலைக்கு ஜப்பானிய நாணயத்தின் (யென்) பெறுமதி குறைவடைந்ததும் முக்கிய காரணிகளுள் ஒன்றாக கருதப்படுகின்றது.

ஏனெனில் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒப்பீடுகள் டொலர் மதிப்பில் உள்ளன.

ஆனால் ஜப்பானின் ஒப்பீட்டளவிலான பலவீனம் அதன் மக்கள் தொகை மற்றும் பின்தங்கிய உற்பத்தித்திறன் மற்றும் போட்டித்தன்மையின் வீழ்ச்சி யையும் பிரதிபலிக்கிறது என்று பொரு ளாதார வல்லுநர்களும் கருத்து தெரி வித்துள்ளனர்.

2010 ஆம் ஆண்டு வரை ஜப்பானின் பொருளாதாரமானது, உலகலாவிய ரீதியில் இரண்டாவது இடத்தில் காணப்பட்ட போதும் சீனாவால் பின்தள்ளப்பட்டது. தற்போது ஜெர்மனியால் நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானிய பல்கலைகளை தவிர்க்கு இந்திய மாணவர்கள்

பிரித்தானிய பல்கலைக்கழகங்களில் விண்ணப்பிக்கும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவு சரிவடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கனடா மற்றும் இந்தியாவுக்கான உறவில் விரிசல் கண்டதை அடுத்து, இந்திய மாணவர்கள் பெருமளவில் கனேடிய பல்கலைக்கழகங்களை தெரிவு செய்வதை தவிர்த்தனர்.

இந்த நிலையில், தற்போது ரிஷி சுனக் அரசாங்கத்தின் புதிய மாணவர் விசா விதிகளால், பிரித்தானியாவும் இந்திய மாணவர்களை இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

உயர்கல்விக்குப் பிந்தைய பணி விசாவிற்கென முன்னெடுக்கப்படும் மதிப்பாய்வு மற்றும் அரசு நிதியுதவி பெறும் மாணவர்கள் தங்களை சார்ந்திருப்பவர்களை அழைத்து வருவதற்கான கட்டுப்பாடுகள் காரணமாகவும் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதன்படி வெளியான தரவுகளின் அடிப்படையில், 4 வீத வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் 8 ஆயிரத்து 770 என ஆய்வுகளில் கூறப்படுகிறது.

எனினும், பிரித்தானியாவின் உயர்கல்வி முறை



உலகளவில் கவனம் பெற்றுள்ளது என்றும் சர்வதேச விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 0.7 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, சீனாவில் இருந்து 3 சதவீதம் அதிகரித்து, விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 910 என பதிவாகியுள்ளது. துருக்கியில் இருந்து 37 சதவீதம் அதிகரித்து, விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 710 என பதிவாகியுள்ளது. கனடாவில் இருந்து 14 சதவீதம் அதிகரித்து, விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 340 என பதிவாகியுள்ளது என்றும் கூறப்படுகிறது.



# ஹமாஸ் அமைப்பின் மற்றுமொரு தளபதி பலி

காசாவில் இஸ்ரேலிய படைவீரர் ஒருவரை பணயக் கைதியாக வைத்தி ருந்த ஹமாஸ் அமைப்பின் முக்கிய தளபதி கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

அகமட் கோல் என்ற ஹமாஸ் தளபதியே கொல்லப்பட்டவராவார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தெற்கு இஸ்ரேலிய நகரங்கள் மீதான தாக்குதலில் அஹ்மத் கோல் ஈடுபட்டார் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித் துள்ளது.

அவர் காசா பகுதிக்கு திரும்பியதைத் தொடர்ந்து, ஷிஃபா மருத்துவ மனைக்குள் இஸ்ரேலிய படைவீரரான மார்சியானோவை பணயக் கைதியாக வைத்திருந்த நிலையில் அங்கு அவர் கொலை கொல்லப்பட்டுள்ளார்.

# காதலர் தினத்தன்று அவுஸ்ரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸூ க்கு நிச்சயதார்த்தம்

காதலர் தினத்தன்று அவுஸ் திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் நிச்சயதார்த்தம் இடம்பெற்றுள்ளது.

பிரதமரின் வாழ்க்கைத் துணைவியான ஜோடி ஹைடன் பிரதமரின் கையைப் பிடித்தார்.

60 வயதான அந்தோனி அல்பானீஸ், 45 வயதான ஜோடி ஹேடனை 2020 இல் சந்தித் தார்.

பிரதமராக பணியாற்றும் போது நிச்சயதார்த்தம் செய்து கொண்ட முதல் அவுஸ்ரேலிய பிரதமர் அல்பானீஸ் என்பதால் இந்த நிச்சயதார்த்தம் முக்கி யத்துவம் பெற்றுள்ளது.

அல்பானீஸ் ஏற்கனவே ஒரு முறை திருமணம் செய்து கொண்டவர். இவருக்கு 23 வயதில் ஒரு மகனும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பெண்களுக்கு அதிகமாக ஏற்படும் 'இரத்தச் சோகை' நோய்

தொகுப்பு: பைஷல் இஸ்மாயில்



ஒருவருக்கு இரத்தச் சோகை நோய் ஏற்பட பல்வேறு காரணங்கள் உண்டு. அதில் மிகவும் முக்கியமானது இரும்புச் சத்து குறைவால் ஏற்படும் இரத்தச் சோகையாகும்.

### பெண்களுக்கு ஏன் அதிகமாக ஏற்படுகிறது?

ஆண்களை விடப் பெண்களுக்கே அதிகமாக இந்த நோய் ஏற்படும். ஏனெனில், பெண்களுக்கு பல்வேறு நிலைகளில் "இரும்புச்சத்து" அதிகமாக தேவைப்படும். அவர்கள் வளரும் பருவத்தில், பூப்படையும் பருவத்தில், கர்ப்பிணியாய் இருக்கின்ற பருவத்தில், பாலூட்டும் பருவத்தில் என பல்வேறு பருவத்திலும் அவர்களுக்கு இரும்புச்சத்து அதிகமாக தேவைப்படுகிறது.

இவ்வாறு தேவைப்படுகின்றபோது போதுமான அளவு இரும்புச்சத்துக் கிடைக்காவிட்டால் "இரும்புச்சத்து குறைவால்" இரத்தச் சோகை நோய் ஏற்படுகிறது.

பெண்களுக்கு குறைந்த பட்சம் 14.5 சதவிகிதம் அளவுக்காவது ஹீமோகுளோபினின் அளவு இருக்க வேண்டும். பெரும்பாலான, பெண்களுக்குக் ஹீமோ குளோபினின் அளவு குறைவாகவே இருக்கும்.

### இரத்தச் சோகை ஏற்பட காரணங்கள் என்ன?

சிலருக்கு, குடலில் கொக்கி புழுக்கள், பிற புழுக்கள் (சிஸ்டோ சோமியாஸிஸ்) அதிகமாக இருந்தாலும் இரும்புச்சத்து குறைபாடு காரணமாக இரத்தச் சோகை நோய் ஏற்படும்.

மாதவிடாய் காலத்தில் அதிகப்படியான இரத்தப்போக்கு அதிகமானாலும் இரத்தச் சோகை நோய் ஏற்படும்.

பாலூட்டும் நிலையிலும், போதுமான உணவு உண்ணவில்லை என்றாலும், உணவுச் சத்துக்களின் பற்றாக் குறையாலும் இரத்தச் சோகை ஏற்படலாம்.

மாதவிடாய் காலத்தில் பெண்களுக்கு மாதந்தோறும் இரத்த இழப்பின் அளவு இருக்கும். அதில் 30 மி.கி. அளவு இரும்புச் சத்து வீணாகிவிடும்.

கர்ப்பிணிகளுக்கு, இரத்தப்போக்கு ஏற்படவில்லை என்றாலும் வளரும் சிசுவுக்கு அதிகமான அளவு இரும் புச் சத்து தேவைப்படுவதால், இவர்களுக்கும் இரத்தச் சோகை ஏற்பட்டு விடும்.

வயதான பெண்களுக்கும், மாதவிடாய் நின்ற வர்களுக்கும் குடல் பகுதியில் இரத்தக் கசிவு ஏற்படுவதால் 'இரும்புச் சத்து குறைபாடு' உடைய இரத்தச் சோகை நோய் ஏற்படலாம். உடல் வலிக்கு பயன்படும் பல்வேறு மருந்துகளை எடுப்பதாலும், புற்றுநோயின் பாதிப்பாலும், இரைப்பை, சிறுகுடல் புண்களாலும் இவர்களுக்கு இரத்தக் கசிவு ஏற்படலாம்.

தினமும் சராசரியாக ஒருவருக்கு 2.5 மி.கி. அளவு இரும்புச் சத்து தேவைப்படுகிறது. மாதவிடாய் தோன்றும் காலங்களில் 1 மி.கி. அளவு மேலதிகமாக இரும்புச் சத்து தேவைப்படும். ஆகவே, மொத்தமாக, இந்தப் பெண்களுக்கு தினமும் 3.5 மி.கி. அளவு இரும்புச் சத்துத் தேவைப்படும்.

### நோய் அறிகுறிகள் என்ன?

பெரும்பாலானோருக்கு எவ்வித பிரச்சினைகளும் இல்லாமல் இருக்கும். மருத்துவ பரிசோதனையின் போது இவர்களுக்கு இரத்தச் சோகை இருப்பது தெரியவரும். பலருக்குப் பொதுவான பல்வேறு உடல் பிரச்சினைகளும், உபா தைகளும் ஏற்படும்.



அசதி, உடல் தளர்வு, பலமின்மை, நெஞ்சு படபடப்பு, தலைவலி, மயக்கம், தலைசுற்றல், பார்வை மங்கல், உறக்கமின்மை, நெஞ்சு வலி, கை, கால், விரல்கள் மரத்து போதல், சுவாசமுட்டல் போன்ற அறிகுறிகள் ஏற்படும்.

தோல் வெளுத்துப் போதல், இதயத் துடிப்பும் இவர்களுக்கு அதிகமாக இருக்கும். காலில் வீக்கம் ஏற்பட்டிருக்கும்.

வாயின் ஓரப்பகுதியில் வெடிப்புத் தோன்றி, பாதிக்கப்பட்டு புண்கள் போல் காட்சியளிக்கும். நாக்குப் பகுதியிலும் புண்கள் தோன்றலாம். வீக்கமும், வலியும் ஏற்படலாம். நகத்தில் வெடிப்புகள் தோன்றியிருக்கும். சிலருக்கு நகம் தட்டையாக இருக்கலாம். வளைந்து, உட்குழிந்தும் காணப்படலாம்.

சிலருக்கு உணவு விழுங்குவதில் கஷ்டமிருக்கும். பலருக்கும் உணவு, சாதாரணமாக சாப்பிடக் கூடிய பிற உணவுகளை விட, களிமண், மணல், சாம்பல் ஆகியவற்றை சாப்பிடுவது மிகவும் பிடிக்கும்.

சிலர் தக்காளி, மிகவும் பச்சையாக உள்ள காய்கறிகளை சாப்பிட விரும்புவார்கள். இவ்வாறான நிலை, இரத்தச் சோகை இருக்கின்ற நேரத்தில் அதிகமாக ஏற்படும். சிலருக்கு மண்ணீரல் அதிகமாக வீங்கி விடும். இரத்தச்சோகை அதிகமாக இருக்கும்போது இதய செயலிழப்பும் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

### பரிசோதனைகள் என்ன?

இரத்த பரிசோதனையின் மூலம் கண்டறியலாம். அவ்வாறு பார்க்கின்றபோது இவர்களின் ஹீமோ குளோபின் அளவு மிகவும் குறைவாக இருக்கும். சிவப்பணுக்கள் அளவில் சிறியவையாக இருப்பதுடன், வெளிறியும் காணப்படும்.

நீள்வட்ட செல்களும் காணப்படும். சிவப்பணுக்களின் எண்ணிக்கை சிறிது குறைவாக இருக்கலாம். எம்.ஸி.வி. எனப்படும் மொத்த செல்களின் அளவு குறைவாக இருக்கும்.

வெள்ளையணுக்கள் எப்போதும் போல சாதாரணமாகக் காணப்படும். சில வெள்ளை அணுக்களில் மையக்கரு பல பிரிவுகளாகப் பிளவுபட்டிருக்கும்.

இரத்த சிவப்பணுக்களில் படியும் தன்மை (ஈ.எஸ்.ஆர்.) எதிர்பார்த்ததை விடக் குறைவாகவே இருக்கும். எலும்பு மச்சையில் இரும்புச் சத்தின் குறைபாடு காணப்படும். இரத்தத்தில் இரும்புச் சத்தின் அளவு மிகவும் குறைவாக இருக்கும். இரும்புச் சத்து சேரும் தன்மை அதிகரித்திருக்கும்.

ஆய்வுகூட பரிசோதனைகளின் மூலம் இரும்புச் சத்து குறைபாட்டால் இரத்தச் சோகை ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். மேலும், நோயாளி செல்லும் குறி குணங்களில் இருந்தும் வயதை வைத்தும் கண்டுபிடித்து விடலாம்.

குறிப்பாக, இவர்களுக்கு குடலில் இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளதா என்ற பரிசோதனை செய்வது அவசி யமாகும். மலத்தில் இரத்தம் உள்ளதா? என்பதையும் கண்டறிவது அவசியமாகும். இதற்கென பிரத்தியோக பரிசோதனைகள் உள்ளன. கதிரியக்க சக்தி கொண்ட குரோமியம் சேர்க்கப்பட்ட சிவப்பணு செல்களை செலுத்தி, அவை எவ்வளவு குடலின் மூலம் வெளியேறுகின்றன என்பதைக் கண்டறியும் பரிசோதனையும் உள்ளது.

மல பரிசோதனையில் கிருமிகள், புழுக்களின் முட்டைகள் உள்ளனவா? என்பதனையும் கண்டறிய

தொடர்ச்சி ▼

# பெண்களுக்கு அதிகமாக ஏற்படும் 'இரத்தச் சோகை' நோய்

**தொடர்ச்சி ▲**

வேண்டும். செயற்கை வால்வு பொருத்தியவர்களுக்கும் இதுபோன்ற இரத்தச் சோகை ஏற்படலாம்.

**இந்நோய்க்குக் காரணங்கள் என்ன?**

பெண்களுக்கு இடைவிடாமல் அடிக்கடி மாதவிடாய் போவதும், அதிகளவில் போவதும் மிகவும் முக்கியமான காரணங்களாகும். அடிக்கடி கர்ப்பிணியாகி, குழந்தை பெறுவதும் ஒரு முக்கியமான காரணமாகும்.

**சிகிச்சைகள் என்ன?**

இரத்தச் சோகை நோயைக் குணப்படுத்துவதற்கு முன்னர், இந்நோய் என்ன காரணத்தால் உண்டானது என்பதனை கண்டறிய வேண்டும். அதனை போக்கினால் நோயும் சரியாகிவிடும்.

வயிற்றில் கொக்கி புழுக்களின் பிரச்சினை இருந்தால் அவற்றை அழிப்பதற்கான மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும். மாதவிடாய் பிரச்சினைக்கு உரிய பரிசோதனைகள் செய்து சிகிச்சை செய்யவேண்டும். அடிக்கடி கர்ப்பிணியாவதை தவிர்க்க வேண்டும். குடல் புண்கள், கட்டிகள், புற்றுநோய்கள் ஆகியவற்றுக்கு உரிய சிகிச்சைகளும் அவசியமாகும்.

**இந்நோயின் பாதிப்பிலிருந்து பாதுகாப்புப் பெறுவது எவ்வாறு?**

இரும்புச் சத்து நிறைந்த உணவுகளை அதிகமாக எடுக்கவேண்டும். குறிப்பாகப் பேரிச்சம்பழம், முருங்கை கீரை, பப்பாளிப் பழம், கல்லீரல், இறைச்சி ஆகியவற்றை இவர்கள் அதிகமாக சாப்பிட்டால் இந்நோயிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

**டாக்டர் முத்துச் செல்லக்குமார்**
MD (Gen.Medi.)

# உயிருடன் இருப்பவர்களின் பெயர்களை பாடசாலைகளுக்குச் சூட்டுவதற்குத் தடை!

## ஏற்கனவே சூட்டப்பட்ட பெயர்களை நீக்க நடவடிக்கை; அரசியல்வாதிகள் பாடசாலைகளில் அரசியல் பேசவும் தடை!!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

உயிருடன் இருக்கும் அரசியல் வாதிகள் உட்பட பல்வேறு நபர்களின் பெயர்களை பாடசாலைகளில் இருந்து நீக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த பணித்துள்ளார்.

இனிமேல் உயிருடன் இருக்கும் யாருடைய பெயரையும் பாடசாலைகள் மற்றும் கட்டடங்களுக்குப் பயன்படுத்த வேண்டாம் எனவும் அவர் உத்தர விட்டுள்ளார்.

இது விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாகாண ஆளுநர்களையும் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த காலங்களில் அரசியல் வாதிகள் உட்பட பல்வேறு நபர்கள் உயிருடன் இருக்கும் போதே இவ்வாறு பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசியல் வாதிகள் உள்ளிட்ட தனி நபர்களின் பெயர்களை அரச பொதுக் கட்டடங்கள், பாடசாலைகள், வீதிகள் மற்றும் மைதானங்கள் உள்ளிட்ட எந்தவொரு அரச சொத்துக்களுக்கும் சூட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உதவி வழங்குகிறோம் என்ற போர்வையில் அரசியல்வாதிகள் பாடசாலைகளுக்குச் சென்று அரசியல் பேச்சுகளை நடத்துவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

# தகுதி வாய்ந்த அதிபரை நியமிக்குமாறு கோரிக்கை

திருகோணமலை, கிண்ணியா வலயத்துக்கு உட்பட்ட இஹ்ஸானியா வித்தியாலய பெற்றார்கள் மற்றும் நலன் விரும்பிகள் இன்று (16) கிண்ணியா – கொழும்பு பிரதான வீதியில் உள்ள பாடசாலையின் முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகுதி வாய்ந்த அதிபர் ஒருவரை தங்கள் பாடசாலைக்கு நிரந்தரமாக நியமித்துத் தருமாறு பெற்றார் மற்றும் நலன் விரும்பிகள் பதாகைகள் ஏந்திய நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

13 வருடங்களுக்கு மேலாக மாணவியர்களது கற்றல் கற்பித்தல் நடவடிக்கை வருடத்துக்குப் பின்னர் சீரற்று காணப்படுகின்றது. அத்துடன் மாணவிகளின் இணைப் பாடவிதான செயற்பாடுகளும் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதையும் பெற்றார் மற்றும் நலன் விரும்பிகள் கூறினர்.



பாடசாலைக்கு நியமனம் பெற்றுவந்த அதிபரை உடனடியாக நிரந்தரமாக்கித் தருமாறும் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.



# திருகோணமலை சிறையில் நூலக நடமாடும் சேவை!

(ஹஸ்பர்)

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகத்தால் திருகோணமலை சிறைச்சாலை கைதிகளுக்கான நூலக நடமாடும் சேவையும் சிறைச்சாலை நூலகத்துக்கு ஒரு தொகுதி புத்தகங்கள் கையளிக்கும் நிகழ்வும் புதன்கிழமை (14) காலை திருகோணமலை சிறைச்சாலையில் இடம்பெற்றன.

நிகழ்வில் நடமாடும் நூலக சேவை பற்றியும் நூலகம் பற்றியும் சிறைக் கைதிகளுடன் கலந்துரையாடல் இடம் பெற்றது. ஒரு தொகுதி நூல்களைச் சிறைச் சாலை நூலகத்துக்கு திருகோணமலை நகர சபையின் செயலாளர் வெ. இராஜசேகர், திருகோணமலை சிறைச்சாலை அத்தியட்சகர் பிறேமவன்ஸ விடம் கையளித்தார்.

நிர்வாக உத்தியோகத்தர் நா . பரமேஸ்வரன், திருகோணமலை சிறைச்சாலை பிரதான ஜெயிலர் இ . மோகனராசா, திருகோணமலை பொது நூலகத்தின் பிரதம நூலகர் ந . யோகேஸ்வரன், நூலகர் மு . லெ . நிம்சானா, நூலக உதவியாளர்கள் உ . ரஜனிகாந்தன், அ . அச்சுதன் , நூலக உழியர் சி . கமலேஸ்வரி, சிறைச்சாலை நலன் புரி உத்தியோகத்தகளான முபாறக் , சாந்த ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தச் சுயதொழில் உபகரணங்கள்

(ஹஸ்பர்)

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் சுயத்தொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டுதலின் பேரில் மாகாண சமூக சேவைகள் அமைச்சு நடத்திய மாற்றுத் திறனாளிகளை கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுய தொழில் உபகரணங்களும், பொழுது போக்குக்காக அவர்களின் வீடுகளுக்கு ரீ.விகளும் செந்தில் தொண்டமானால் வழங்கி வைக்கப்பட்டன.

சாதனைகள் நிகழ்த்திய தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு விருதுகளும் வழங்கப்பட்டன.

இதில் மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



